DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.23**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | மீனாட்சி சுந்தரம் |
| Father Name | : | துரைச்சாமி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.03.2026.

( 1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 11வது எதிரி இறப்பு. 4, 6, 8, 10, 12, 13, 14 மற்றும் 17 எதிரிகள் ஆஜர். 3, 5, 9, 15, 16 மற்றும் 18 எதிரிகள் ஆஜர் இல்லை. 3, 5, 9, 15, 16 மற்றும் 18 எதிரிகள் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது திருப்பாலை, பொறியாளர் நகரில் வசித்து வருகிறேன். நான் தேசிய நெடுஞ்சாலை துறையில் ஒப்பந்ததாரராக இருக்கிறேன். நான், இறந்துபோன சுரேஷ்பாபு, சுப்பிரமணியன், கண்ணன் மற்றும் பாலமுருகன் ஆகியோர்கள் பார்ட்னர்களாக இருந்து தொழில் செய்தோம். எங்கள் அலுவலகத்திற்கு வரும் போது சுரேஷ்பாபு எங்கு போகிறார், வருகிறார் என்ற விபரத்தை எங்களிடம் பகிர்ந்துகொள்ளமாட்டார். நாங்களும் கேட்க மாட்டோம். சம்பவத்திற்கு முதல் நாள் வெளியூர் செல்வதாக சொல்லியிருந்தார். சம்பவம் அன்று எங்கள் அலுவலகத்திற்கு வந்திருந்தார். வெளியூர் போய்விட்டு வந்துவிட்டீர்களா என்று கேட்டேன், வந்துவிட்டதாக சொன்னார். பின்பு நான் என்னுடைய மகன்களை அழைப்பதற்கு அண்ணாநகர் சென்றுவிட்டேன். அப்போது சுமார் இரவு 08.00 மணியளவில் சுரேஷ்பாபுவின் டிரைவர்

மணிகண்டன் எனக்கு போன் செய்து அண்ணனை பைக் மற்றும் டாடா ஏஸ் வண்டியில் வந்து வெட்டிவிட்டார்கள் அவர் கீழே விழுந்துகிடக்கிறார் என்று சொன்னார். நான் உடனே எங்களுடைய மற்ற பார்ட்னர்களுக்கு போன் மூலம் இந்த தகவலை சொன்னேன். நான் அண்ணாநகரில் என் மகன் படித்த டியூசன் சென்டரில் இருந்து காரில் சென்று நாராயணபுரத்தில் உள்ள எனது பார்ட்னர் கண்ணனுடைய வீட்டிற்கு சென்று அவரையும் அழைத்துகொண்டு சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று கொண்டிருந்த போது, பிணத்தை அரசு இராசாசி மருத்துவமனைக்கு எடுத்து சென்றதாக தகவல் கிடைத்தது. உடனே நாங்கள் நேரடியாக மேற்படி மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். சுரேஷ்பாபுவின் பிணத்தை பார்த்து விட்டு அவருடைய டிவிஎஸ் நகர் வீட்டிற்கு அவருடைய மனைவி மற்றும் மகளுக்கு ஆறுதல் சொல்ல சென்றோம். நாங்கள் அன்று இரவு எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். சம்பவம் நடந்த தேதி 31.01.2013ம் தேதி நடந்தது. என்னை கணேசன் என்ற DSP விசாரணை செய்தார். எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் தல்லாகுளத்தில் 2005ம் ஆண்டு கிருஷ்ணவேணி கன்ஸ்டரக்சன் என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வந்தேன் என்றும் அந்த நிறுவன அலுவலகத்திற்கு நண்பர் என்ற முறையில் சுரேஷ்பாபு வந்து செல்வார் என்றும், நிறைய பேர் அவரை பார்க்க வருவதால் 2007ம் ஆண்டு நான் குடியிருக்கும் என் வீட்டின் கீழ் தளத்தில் யோகா அண்ட் கம்பெனி என்ற நிறுவனத்தை ஆரம்பித்து அதில் நான், சுப்பிரமணி, பாலமுருகன், கண்ணன் மற்றும் பொட்டு சுரேஷ் ஆகியோர்கள் பங்குதாரர்களாக இருந்து நிறுவனத்தை

நடத்தி வந்தோம் என்றும், அந்த விபரத்தை முதல் விசாரணையில் மறைத்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை.

**<u>15, 16 மற்றும் 17 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

இந்த வழக்கில் என்னை கணேசன் என்ற DSP அவர்கள் ராமசாமி நகர், திருமால்புரத்திலுள்ள எங்களுடைய அலுவலகத்தில் 01.02.2013ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்குள் என்னை விசாரித்தார். எனக்கு கைப்பேசி மூலம் தகவல் கிடைத்ததாக நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளது சம்மந்தமாக போலீஸார் என் கைப்பேசி வாங்கி பரிசோதிக்கவில்லை. எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த வழக்கு சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் கேள்விபட்ட மேற்படி சம்பவத்தை நான் எனது பார்ட்னர்களுக்கு தெரிவித்ததன் பேரில் தான் அவர்களுக்கு அந்த சம்பவம் தெரியும். நான் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்க்கவில்லை. நான் இறந்து போனவரின் நண்பர் என்ற முறையில் காவல்துறையினரால் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கபட்டுள்ளேன் என்றால், சரிதான்.

**<u>1, 9, 10 மற்றும் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் ஓட்டுநர் மணிகண்டனிடம் இருந்து எனக்கு எந்த தகவலும் கிடைக்கபெறவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் நான் சம்பவம் குறித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால், சரியல்ல. எனது செல்போனில் உள் மற்றும் வெளி அழைப்புகள் பதிவாகி இருக்கும் என்றால் சரிதான். என்னை DSP விசாரித்த போது என்னுடைய

செல்போன் எண்ணையும் மணிகண்டனின் செல்போன் எண்ணையும் விசாரித்து பெறவில்லை என்றால் சரிதான்.

**<u>மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.09 17:39:50 +0530